3. அறிக்கை அளித்தல்

அவை உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுவின் அறிக்கை அளித்தல். அவை உரிமைக் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு திரு. அருணாசலம் அவர்கள்.

மாண்புமிகு திரு. அ. அருணாசலம் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை குறித்து, அவையில் நடந்த நிகழ்வுகள் தொடர்பாக, அவர் எழுத்துமூலமாக வருத்தம் தெரிவித்திருப்பதால், இப்பிரச்சினையை இத்துடன் முடிக்கலாம் என, அவை உரிமைக் குழு தீர்மானித்து, அதனடிப்படையில், அறிக்கையைப் பேரவையில், அவை உரிமைக் குழுவின் தலைவராகிய நான், குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

4. அரசினர் தீர்மானங்கள்

(அ) திரு. எஸ்.ஆர் பாலசுப்பிரமணியன் அவர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த குழுவின் அறிக்கையை விதி 229 (ஆ)-ன்கீழ் ஆய்வு செய்தல் மற்றும் அதன் பரிந்துரைகளுக்கு விதி 229 (ஈ)-ன்கீழ் இசைவு கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"இன்று பேரவைக்கு அளிக்கப்பெற்ற, திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள்மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை குறித்த அவை உரிமைக் குழுவின் அறிக்கை பேரவை விதி 229 (ஆ)—ன்கீழ், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.